பதிவு எண்: ம. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 15] சென்னை: ஆவணி 29உ (14-9-67) வியாழன் ★ வெளியூர்: ஆவணி 30ட (15-9-67) வெள்ளி [இதழ்: 77

அண்ணாவும் தம்பிகளும்!

" 'தம்பிகள் வேறு—நான் வேறு' என்று பிரித்துப் பார்க்காதீர்கள்! தம்பிமார்களெல்லாம் சேர்ந்த உருவம்தான் நான்! தம்பிகளை எல்லாம் பிரிக்காமல் சேர்த்துப் பார்த்தால் என்னைப் பார்ப்பீர்கள்! என்னைப் பிரித்துத் தனித்தனியாகப் பார்த்தால் தம்பிகளைப் பார்ப்பீர்கள்! பேதம் பார்த்துப் பிரிக்க முடியாதபடி ஒன்றாகக் கலந்துபோனவர்கள் நாங்கள்!"

—அறிஞர் அண்ணா

வாழிய அந்த அறவாழி அண்ணா!

மக்களிடம் வரம் கேட்டுப் பொறுப்பேற்ற பேரறிஞர் வாழ்க! | சென்றஆண்டுகளில்சிறையிருந்தார்- இன்று நாடாளுகின்றார்!

எல்லை விரிகிறது! வாழ்த்துவோர் தொகை நாளும் வளர்கிறது!

நாடு வாழ்த்துகிறது அவரை! 'நம் நாடு'ம் வாழ்த்துகிறது!

"பறவைகளில் சில பொந்துகளில் அடைபடச் செல்லா முன்பே, எங்களை அறையில் கொண்டுவந்து அடைத்துவிட்டுச் சிறைக் காவலாளிகள், 'அப்பா! தொல்லை தீர்ந்தது!' என்று எண்ணிக்கொண்டு போய் விட்டனர்! காலை முழுதும் ஒருவரோடொருவர் பேசி ஒன்றாக உலவிட இருந்த வாய்ப்பு, மாலை 6-மணிக்கெல்லாம் பறிபோய்விடுகிறது!"

1964-ம் ஆண்டில், சென்னை மத்திய சிறையில் இருந்த 6342 எண்ணுள்ள 'கைதி' எழுதிய 'ஜெயில் டயரி' இது!

அந்தக் 'கைதி'யின் சொற்களிலேயே சொல்லுவதானால், வேக மறுக்கும் அரிசி—பருப்பு—காயாத விறகு—சுவையும் மணமும் பறிமுதல் செய்யப்பட்டுவிட்ட பண்டங்கள்—இவைகளைக்கொண்டு' சிறையில் அவர்களே சமைத்து 'இன்னமுது' சாப்பிட்டார்கள்!

6—3—1964-ல் சிறையில் இருந்த அவர்தான், 6-3-1967-ல் தமிழகத்து ஆட்சி லகானைக் கையில் பிடித்துக்கொண்டார்!

வரலாறு காணாத—மிகவும் விரைவான—புரட்சிகரமான வளர்ச்சிதான் இன்றைய சகாப்தத்தின் சிறப்பியல்பு! அந்தச் சிறப்புக்கும் சிகரம் வைத்திருக்கிறது, அண்ணாவின் வெற்றி!

செப்டம்பர் 15—தமிழ்க்குலம் விளங்க அவர், இந்த மண்ணிற் தோன்றிய நாள்! 58 ஆண்டுகளின் முன்னே 1909-ல் அவர்—காஞ்சி நகரில் தோன்றிய அவர்—இன்று, காசினி வியக்க வாழ்கிறார்!

இத்தனை நாள், அவர் பிறந்த நாள், குடும்பப் பாசத்தோடு தோழர்கள் -- தொண்டர்களால் மட்டுமே கொள்ளை மகிழ்ச்சியுடன் கொண்டாடப்படும்! இந்தப் பிறந்த நாளில், அந்த எல்லையைக் கொஞ்சம் விரிவாக்கி, அனைவரும் ஒரு புதிய எழுச்சியுடன் அவர் பிறந்த நாளைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள்!

பிறந்த நாளில், கோயில் தெய்வங்களின் வாழ்த்துக்களை அவர் தேடிக்கொண்டு போவதில்லை! மனித தெய்வங்கள் அவரை, இடம் தேடிச் சென்று வாழ்த்துகின்றன! மக்கள் தான் அவருக்கு மகேசர்கள்! அவர்களை நம்பித்தான் அவர், இந்தப் பொறுப்பையே ஏற்றுக்கொண்டிருக்கிறார்!

"எரிகிற நெருப்பில் தங்கக் கட்டிபோல், அரசியல் எதிர்ப்புக் குமுட்டியில் நாங்கள் வைக்கப்படுகிறோம்; எங்களை நல்ல ஆற்றல் உள்ளவர்களாய்—ஆளும் வல்லமை உள்ளவர்களாய்—வகை வகையாய் ஆபரணங்களாய்ச் செய்து, நல்ல ஆட்சியைத் தமிழகத்துக்குத் தரவேண்டியது உங்கள் பொறுப்பு.

"உங்கள் கண்ணொளியில்—கருத்து முழக்கத்தில்—அறிவு ஆற்றலில் தளராத நம்பிக்கை வைத்திருக்கிறேன்; என்னை நம்பவைத்து மோசம் செய்யாதீர்கள்"

என்று நெஞ்சுருக நின்று, மக்களிடம் 'வரம் கேட்டு'ப் பொறுப்பேற்றவர் அவர்!

இத்தனை முறை, பிறந்த நாட்களின்போது தமிழகத்தின் எங்கோ ஒரு மூலையில் - ஏதோ ஒரு பட்டியில் கடமை செய்துகொண்டே, 'சென்ற முறை இந்த நாளில் இன்ன சிறையில்; இந்த முறை உங்களிடையே நிற்கிறேன்; அடுத்த ஆண்டு எந்தச் சிறையிலோ?' என்று விழுப்புண் பெற்ற விடுதலை வீரனின் விவேகத்தோடு பேசிய அவர், இனி என்றென்றும் தமிழகத்தின் ஆட்சிப் பொறுப்பைத் தலைமை ஏற்று நடத்திட வேண்டியவர்!

தமிழகத்தின் மூலை முடுக்கிலெல்லாம் இன்று அவர் புகழ் மணக்கிறது! பட்டிதொட்டிகளெல்லாம் அவர் பிறந்த நாளில் விழா எடுக்கின்றன! ஊர்தோறும் ஏழைகளுக்குக் கஞ்சி வார்க்கிறார்கள்! குழந்தைகளுக்கு இனிப்புகள் வழங்குகிறார்கள்! பள்ளிச் சிறுருக்குப் பலகை—பலப்பம் தரப்படுகிறது! யார் யாருக்கு எப்படி எப்படி விருப்பமோ—யார் யாருக்கு எப்படி எப்படி இயலுமோ—அவரவர், அப்படி அப்படி அவர் பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்கள்!

மக்களில் ஒருவர் அவர்! மக்களின் தலைவர் அவர்! மக்களை வைத்துக்கொண்டுதான் அவர் மா காவியம் தீட்டுகிறார்! தலைமறைவாயிருந்து கொண்டே, ஆட்சியைக் கைப்பற்றிட ஆயுதப் புரட்சிக்கு ஆயத்தம் செய்த தலைவர் அல்லரே அவர்!

58-வது பிறந்த நாளில் அவர் இந்தியத் துணைக் கண்டத்தின் கேள்விக் குறி! இன்று 59-வது பிறந்த நாளில் அவர், இந்தியத் துணைக்கண்டத்தின் வியப்புக் குறி!

வெறும் வறட்டுத் தத்துவங்களின் பரம வைரியான அண்ணா அவர்கள், தாம் சொல்லிவருவனவெல்லாம், 'செயலுக்குரிய வழிகாட்டிகளே' என்பார்கள்! அவர் முதன்முதலாய்த் தயாரித்த நிதிநிலை அறிக்கையை, அந்தத் துறை வல்லார் அனைவருமே ஒருமுகமாய்ப் பாராட்டினார்கள்!

சென்ற பிறந்த நாளில், 'கானம் பாடும் வானம்பாடியாய் நாட்டு மக்களின் ஆசைகளைக் கிளறிவிட்டுக் கொண்டிருந்த அண்ணா, இன்று அந்த இசைக்கு ஏற்ப ராகம்—தாளம் அமைப்பதில் ஈடுபட்டுக் கிடக்கிறார்! அவருக்கு எல்லாரும் தோழர்கள்! தமிழக அரசு தலைமைச் செயலக ஊழியரைக் கூட்டி வைத்து, 'தோழர்களே' என்று விளித்தாரே—அது ஒன்றே போதுமே!

கழக ஆட்சியின் கொள்கை சம்பந்தமான முக்கிய பிரச்சினைகள் அனைத்தையும், அவர், வரையறுத்துக் கொடுக்கும் அழகே அழகு! ஆட்சிப் பொறுப்பேற்றதும் சென்னையில் கூட்டினாரே, மாவட்டக் கலெக்டர்கள் மாநாடு—அதுவும், ஆங்காங்கே கருத்தரங்குகளைக் கூட்டி மக்களின் கருத்துக்களை அறிகிறாரே—அதுவும், என்னவென்று நினைக்கிறீர்கள்? அதுதான் சனநாயகத்தைப் பரவலாக்கும் முயற்சி! 'எடுக்கப்படும் முடிவுகளுக்கு நாமும் சொந்தக்காரர்கள்' என்று திருப்திப்பட வைக்கும் திருப்பம்!

உச்சந்தலைமுதல் உள்ளங்கால்வரை அவர் முழுக்க முழுக்க சனநாயகவாதி!

சனநாயகப் பூங்காவைத் தமிழகத்துள் வளர்த்துவரும் - 59 வயது தொடங்கும் அண்ணா அவர்கள், ஏழைக்குச் சொந்தக்காரர்; அதனால்தான் 'ரூபாய்க்கு ஒரு படி அரிசி' ஏழைக்காகப் போட ஏற்பாடு செய்தார்!

தீயவரின் தீ அண்டவொட்டா குடில்களை அவர்களுக்கு அமைத்துக் கொடுக்கிறார்!

'எத்தனை கோடி கஷ்டம் -- நஷ்டம் இருந்தாலும்' மதுவிலக்கில் இன்னம் உறுதியாக நிற்கிறார்!

58 ஆண்டுகள் காடுமேடுகள் -- பட்டிதொட்டிகள் எல்லாம் கால்நடையாய், கட்டைவண்டியில், பஸ்களில், லாரிகளில், கார்களில் சென்று, 'தமிழகத்தில் தம் கால் படாத இடமே இல்லை' என்று சொல்லும் அளவு சென்று தொண்டு செய்த அண்ணா அவர்களுக்குச் சிக்கலான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது என்பது, கைவந்த கலை!

ஆனாலும், 'கட்டுக் கட்டாய்ப் 'பைல்'களைப் படித்து ('பைல்'களைப் பார்த்து அல்ல) முடிவுசெய்யும் கடமை, கொஞ்சம் தொல்லை தரும் புதிய சடமைதான்! ஆனால், அதற்கும் ஊடே, தொழிலாளர் கூட்டங்களில் கலந்துகொண்டிட—நாடகத்திற்குத் தலைமைதாங்கிட—திருமணங்களை நடத்திக் கொடுத்திட—கழகத் தோழர் குறைகள் கேட்டிட—கட்சி நிலைமைகள் ஆய்ந்திட, அலசிட—அத்தனைக்கும் அவர் நேரம் வைத்திருக்கிறார்!

59 வயது தொடங்கும் நிலையில் அவர் பெற்றிருக்கும் பட்டறிவு கொஞ்சமா? இச்சகம் பேசுவோர் அவருக்குத் துச்சம்!

பொறாமை — அவநம்பிக்கை — அகம்பாவம்—இவை, அவர் அகராதியில் இல்லாத சொற்கள்!

அனைவருக்கும் உரிய மரியாதை தருகிறவர் அவர்! இந்தப் பான்மைக்கு ஒரே ஒரு சான்று வேண்டுமானால், 6—3—67-ல் அவர் பொறுப்பேற்றுக்கொண்ட நாள் நிகழ்ச்சி ஒன்று போதும்!

பதவியேற்பு உறுதிமொழிகள் முடிந்ததும், கோட்டைக்குச் செல்ல அதிகாரிகள் புடைசூழ—இராஜாஜி மண்டபத்தின் நெடிய படிக்கட்டுகளில் இறங்கி வந்தார் அண்ணா! தம்மைக் காரில் ஏற்றத் துணை செய்த காவல்துறை அதிகாரியையும், காவலர் வளையத்தையும் நீக்கிக்கொண்டு, எதிரே திரள் திரளாய்த் 'தேங்கி' யிருந்த தோழர்களை நோக்கிக் கைகூப்பியவாறே சென்றார்! அன்று இதயங்கள் பேசிக்கொண்டன!

அண்ணனும் தம்பிகளும் தம் நெஞ்சங்களால் 'பேசி'க்கொண்ட அந்தப் 'பேச்சு', கண்டவர் கண்களைக் குளமாக்கின—ஆனந்தத்தால், அன்பால்!

59 வயது தொடங்கும் அவர் தமிழகத்தின் முதலமைச்சர் தான்—ஆனால், நமது அண்ணன்! மக்களின் சொத்து!

வற்றாதஊற்றுப்போல்பொங்கிப் பொசியும் அந்த உத்வேகம்—ஆழ்கடல் நிகர்த்த அந்த அறிவாற்றல் — மலை குலைந்தாலும் நிலை குலையா திடசித்தம்—இவை, அவரிடம் இன்னம் வளர்ந்து செழித்திட இந்த நன்னாளில் 'நம் நாடு'ம் வாழ்த்துகிறது! 'நம் நாட்டு'க்கு ஓர் ஆசையும் உண்டு!

அண்ணனின் 58-வது பிறந்த நாளில் தமிழகத்து எதிர்க் கட்சிகள், உதிரி உதிரியாய்ச் சிதறித் திசைக்கொன்றாய்ப் பிரிந்துகிடந்தன! 59-ம் பிறந்த நாளிலோ, காங்கிரசு ஒன்று மட்டுமே 'எதிரிக் கட்சி'யாய் நின்றிட — மற்ற கட்சிகள் அனைத்தும் அண்ணாவின் பக்கம் நிற்கின்றன!

அதற்குக் காரணம், விருகம்பாக்கம் மாநாட்டில் வள்ளுவர் கருத்தை, ம. பொ. சிவஞானம் அவர்கள் விளக்கிய மாதிரி—

"பகையையும் நட்பாய் ஏற்கும் பண்புடைய தகைமையாளரிடம் கட்சிகள் மட்டுமல்ல—உலகமே சென்று அடைகிறது!"

இன்று காங்கிரசுக் கட்சி விதிவிலக்காய் நிற்கிறது! ஆனால் காலம் மாறும்—கருத்துக்கள் மாறும்—காங்கிரசும் அண்ணாவின் பக்கம் வந்தே தீரும்!

இன்றில்லாவிட்டாலும்—அண்ணாவின் 60-வது பிறந்த நாளில் இல்லாவிட்டாலும்—மணிவிழா நாளிலாவது அது நிகழத்தான் போகிறதென்று 'நம் நாடு' நம்புகிறது!

தமிழகம் 'ஒன்று'கிவிட்ட தென்ற அந்த நல்ல சேதியை, 'நம் நாடு' பெரிய அளவில் எட்டுக் காலங்களில் வெளியிட விரும்புகிறது! அண்ணா அவர்களின் இந்தப் பிறந்த நாளில் இதைவிட வேறெப்படி ஆசைப்பட முடியும்?

வாழிய அந்த 58-வயது முடிந்த அறவாழி அண்ணா! ஆயிர வெள்ளம் வாழிய பலவே!

வாழ்க அண்ணா!

"புலஅரசைப் புறங்கண்ட புகழ்சேர் கோவே
பூவலயந்தனில் கரிஆய் நின்ற மன்னா
சோல் அரிய திருநாமம் உனக்கே அல்லால்,
சோல ஒருவர்க்கு இசையுமோ
—தோண்டைக்கோவே"

தெள்ளாற்றுப் போர் வென்று, 'தமிழ் நந்தி' எனச் சிறப்புப் பெற்றுக் காஞ்சியிலிருந்து பேரரசாண்ட மூன்றும் நந்திவர்மன் புகழ் பாடும் 'நந்திக் கலம்பகத்'தின் இந்த வரிகள், அதே காஞ்சியில் பிறந்து தமிழகத்தை இன்று தம் சனநாயகக் குடை நிழலில் இளைப்பாற்றிக் கொண்டிருக்கும் அறிஞர் அண்ணா அவர்களுக்கும் பொருந்தும் எனக் கூறுவது, அரை உண்மையே ஆகும்.

மூன்றும் நந்திவர்மனுக்கு, 'புல அரசைப் புறங் காணச் செய்யும்' வீரத்தை வெளிக்காட்டுவது தான் பிரச்சினையாக இருந்தது. ஆட்சித் துறையில் அவன் செங்கோல் மன்னனாக இருக்க வேண்டும் என்ற விருப்பம் தவிர, மக்களை வழி நடத்தும் பொறுப்பேதும் வைத்துக்கொண்டதில்லை.

'அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி' என்பது அன்றைய மரபு! 'குடிகள் எவ்வழி குடியாட்சி அவ்வழியே' என்பது இன்றைய நிலைமை! ஆகவே, அறிஞர் அண்ணா அவர்களுக்கு நந்தி வர்மனைக் காட்டிலும் பொறுப்புகள் அதிகம்! சிறப்புகளும் அதற்கேற்பவே அமைபவை!

'பைந்தமிழ் ஆய்ந்த கோன் நந்தி' தமிழை வளர்த்தான்; தமிழகத்தைப் போர்க் கலை பயிலும் திடலாக மதித்தான்!

குடியரசின் திறம்பாடும் குடிக்கோன் அண்ணா, தமிழைக் காத்து நிற்கிறார்! தமிழகத்தை சனநாயகப் பயிர் செழிக்கும் பண்பட்ட நிலமாகப் பழக்கி வருகிறார்!

நந்திக்கு, தவிர்க்க முடியாத குறைபாடு ஒன்றிருந்தது; அவன் முடியரசனாக விளங்கினான். அறிஞர் அண்ணா அவர்களுக்கு அந்தக் குறை இல்லை; இந்த நிறைவே அவருக்குள்ள பலம்! அவரைத் தாக்கிப் பேசிப் பிறர் பிழைத்துக் கொண்டிருப்பதற்கான இலக்கும் இதுவே!

அவருடைய இலக்குக்குத் தப்பி இந்தத் தமிழகத்தில் எதுவும் இருக்க முடியாது! அதேபோல் அவரை இலக்காக வைத்துப் பேசப்பட்ட ஏச்சுப் பேச்சுகளும், தொடுக்கப்பட்ட பகைமைக் கணைகளும் சொல்லித் தீர்க்க முடியாதவை—எண்ணிக் கணிக்க இயலாதவை!

கார்ல் மார்க்சும், லெனினும், உலகத்திலேயே அதிகமான கண்டனங்களுக்கும் விமரிசனங்களுக்கும் ஆளானவர்கள் என்று சொல்லப்படுகிறது. அறிஞர் அண்ணா அவர்களையும் இவர்களோடு சேர்த்துக் கணக்கிட்டு இனி மூன்று பேராகக் குறிப்பிடலாம்.

சேயின் நோய் போகத் தாய் மருந்துண்பதைப் போல், மனிதர்களின் கேடுகள் போக, 'ஏச்சுக்களை' ஏற்றவர்கள் இவர்கள்!

சோவியத் புரட்சியை அடுத்த ஐந்தாறு ஆண்டுக் காலத்தில் ஏற்பட்ட நெருக்கடியிலிருந்து இரஷ்யாவைக் காப்பதற்கு லெனின் எத்தகு முயற்சிகளை எடுத்துக்கொண்டார்? — இதை, நூல்களில் தேடிப் பார்த்துத் தெரிந்துகொள்ள வேண்டுமென்பது தமிழர்களுக்குத் தேவையில்லை.

அறிஞர் அண்ணா அவர்கள், தமது இயக்கமான தி. மு. கழகத்தை இத்தனை ஆண்டுகள் கட்டிக் காத்து நாடாளும் சக்தியாக உருவாக்கியதை நேரில் பார்த்தவர்களுக்கு லெனின் எப்படிச் செயலாற்றினார் என்பது படித்துத்தான் தெரிய வேண்டுமா?

தன் பிறவிப் பகையாகக் கருதிய அமெரிக்காவிடமிருந்தும் உதவிபெற்று நாட்டை நிலை நிறுத்த முயன்றார் லெனின். அதேபோல், தன் பிறவி உரிமையாகக்கருதிய நாட்டுப் பிரிவினைக் கொள்கையைக்கூட நிலைமையைக் கருதித் தளர்த்திக்கொண்டு, கழகத்தை வாழ வைப்பதற்கு அண்ணா துணிந்தார்!

லெனின் அமெரிக்காவிடம் உதவிபெறத் துணிந்ததும், ஸ்டாலின் போட்ட நிபந்தனைகளுக்கு ரூஸ்வெல்ட் ஒப்புக்கொண்டதும், 'அரேபிய மண்ணில் ஆக்கிரமிப்பு செய்தது இஸ்ரேல் நாடுதான்' என்று இந்தியா-தன் நடுநிலைக் கொள்கையை மறந்து குரல் கொடுத்ததும், 'இராசதந்திரம்' என்று மெருகு பூசப்படுகிறது.

அதே நேரத்தில், பிரிவினைக் கொள்கையைத் தளர்த்திக்கொண்ட அறிஞர் அண்ணா அவர்கள் குறித்துப் பேசப்படும் நச்சுச் சொற்களைத் தமிழகம் கவனிக்கத் தவறவில்லை! அதேபோல், இவைகளைக் கேட்டுக் கொண்டிருக்க அண்ணா அவர்கள் நேரம் எடுத்துக்கொள்வதுமில்லை!

தனக்கு அரச பதவி கிடைத்தால் போதுமென்று தந்தையையும், கூடப் பிறந்தவர்களையும் சிறையில் போட்டு வதைத்த அவுரங்கசீப் காலத்திய ஆட்சி நிலப்பரப்பிலேயே கவனம் செலுத்திக் கனவு காண்பவர்களுக்கு, மகன் உயிர் காக்கத் தன் உயிர் ஈந்த பாபர் தெரிய முடியாது!

நாடு—மொழி—மக்கள்—இயக்கம் வாழவேண்டுமென்பதற்காக, தான் பழிச்சொல்லை ஏற்கிறார் அண்ணா! இத்தகு மாண்பை அறிந்துகொள்வதற்கான அறிவும், அண்ணா அவர்கள் உழைப்பால்தான் இனி இவர்களிடையில் உருவாக வேண்டியிருப்பதும், சரித்திரத்தின் நியதியாகப் போய்விட்டிருக்கிறது!

'இந்தியா' என நினைத்து கொலம்பஸ், அமெரிக்க மண்ணை மிதித்ததுபோல்—இன்று அறிஞர் அண்ணா அவர்களைப் பாராட்ட நினைப்போரும், பல்வேறு விவரங்களைக் கூறுகிறார்கள்.

கொலம்பசின் தவறுதலான கணிப்பால் உலகத்திற்குப் புதிய நிலப் பரப்புக் கிடைத்தது. அண்ணா அவர்களைத் தவறுதலாகச் சித்தரிப்போரும், அவரைப் பற்றிய புது இலக்கியங்களைப் படைக்கிறார்கள்! என்றாலும், தனித்த மனிதர் யாரும், அறிஞர் அண்ணா அவர்களை முழுமையாகப் படம் பிடித்துக் காட்ட முடியாது! 'இதுதான் என் அண்ணனின் மாண்பு' என வரையறுத்து எந்தத் தனித்த தமிழனும் சரியாகக் கூறிவிட முடியாது! தமிழகம் முழுவதும் சேர்ந்தால்தான், அண்ணா அவர்களின் மொத்தச் சிறப்பை முழுமையாகத் தெரிவிக்க முடியும்.

"அவரை—குறிப்பாக அவர் கலைத் தொழிலை—கருவிலிருந்து விளக்க ஆசையுண்டு; ஆனால், இந்தக் கட்டத்தில் நம் ஆராய்ச்சிமுறை தோல்வியடைகிறது" என்று புகழ்பெற்ற மாமேதை லியார்னா-டா-வின்சியைப் பற்றி மற்றொரு பேரறிஞரான சிக்மண்டு பிராய்டு குறிப்பிட்டார்.

உலகத்துச் சிந்தனையாளர்களின் முன்வரிசையில் கம்பீரமாக அமர்ந்திருக்கும் பிராய்டுகூட, 'வின்சி'யைப் பற்றி முழுசாக விளக்க முடியவில்லையென்றால், வின்சியைப் போலவே எடுத்த துறைகளிளெல்லாம் எழில் கூட்டி ஒளிபரப்பிக் கொண்டிருக்கும் அறிஞர் அண்ணா அவர்களைப் பற்றி, யார், 'கருவி'லிருந்து விளக்க முடியும்?

ஆனால், பிராய்டைப் பின்பற்றி எதிலும் ஆராய்ச்சி செய்து, அறிவின் தேட்டத்தில் உரசிப் பார்க்காமல் அன்பின் பிணைப்பில் கட்டுண்டு இருதயத்தைச் சற்று விசாலமாக்கப் பார்த்தால், தமிழர்கள் ஒவ்வொருவரும் அறிஞர் அண்ணா அவர்களை முழுமையாகக் காணலாம்!

அறிவினால் சிந்தித்து அவரைத் தமிழகம் தலைவராக ஏற்றுக்கொள்ளவில்லை; அன்பினால் கட்டுண்டு அவரை அண்ணனாக இந்த நாடு வரித்துவிட்டது!

வீரத்தைக் காட்டி—புலமையை வெளிப்படுத்தி—தமிழகத்தை 'ஒரு குடைகீழ் கொண்டுவந்து ஒரே மாதிரி சிந்திக்கச் செய்தவர்கள் தமிழகத்தின் வரலாற்றில் மிகப் பலர் இருக்கிறார்கள்.

அன்பினால்—பண்பினால்—மற்றவர் கண்களில் தேங்கும் நீர் தம் இதயத்தில் வழியும் குருதியாக நினைப்பதால், 'ஒரு குடைகீழ்' கொண்டாலும் ஒரே தலைவராக அறிஞர் அண்ணா அவர்களைத் தான் சொல்ல முடியும்.

இந்த சனநாயகச் சகாப்தத்தில் மக்களிடையில் தொண்டாற்றத் தலைப்பட்ட ஒருவருக்குச் செல்லப் பெயர், சாமானியமாக வேரூன்றாது—எடுபடாது!

இந்த நூற்றாண்டு முற்பகுதியின் இணையற்ற தலைவர்களாகவும், அவரவர் சமூகங்களிடையில் பெரும் விழிப்பேற்படுத்தியவர்களாகவும் விளங்கும் லாயிட் ஜார்ஜ், சர்ச்சில், சன்யாட் சன், நேரு போன்றவர்களையும், மக்கள், செல்லப் பெயரால் அழைக்கவில்லை! பார்க்கப் போனால், இரஷ்யாவின் லெனின்கூட தனக்கென ஓர் செல்லப் பெயரைத் தாங்கவில்லை! துருக்கியின் கமால் பாட்சாவுக்கு அமைந்த 'அத்தாதுர்க்' எனும் பெயர்கூட அவரே தனக்குச் சூட்டிக்கொண்டதாகும். செல்லப் பெய

(4-ம் பக்கம் பார்க்க)

அவர்!

எங்கும் எதிலும் அவர் இருக்கிறார்! அவர் இல்லாமல் எங்கேயும் எதுவும் இருக்க முடியவில்லை!

நாட்டின் அரசியல் பொழுது அவருடன் விடிகிறது—அவருடன் இயங்குகிறது—அவருடன் முடிகிறது! பின், அடுத்த நாள் மீண்டும் உதிப்பது அவருடன்தான்!

நாட்டின் அரசியல் துறையுடன் சேர்ந்து இயங்குகின்றனர் பல தலைவர்கள்; ஆனால், அரசியல் துறை, அவரையொட்டி இயங்குகிறது!

அவர் ஒரு பகலவன்! பார்ப்பதற்கு, ஓரிடம் விட்டு மற்றோரிடம் செல்வது போலிருக்கும்!

சூரியனை நோக்கிய பகுதி—பகல்; நோக்காத பகுதி—இரவு அல்லவா?

அவர் பார்வை, நிழல் போகுமிடமெல்லாம், விழிப்பு—வெளிச்சம்—விளக்கம்—தெளிவு—நேர்மை அனைத்தும் சேர்ந்து பிரகாசிக்கின்றன!

இவையெல்லாம் வேண்டுமென்போர், அவரை நோக்கி நகர்ந்த வண்ணமிருக்கின்றனர்! நன்மையைப் பெற்றவண்ணமிருக்கின்றனர்!

நாடு விடுதலை பெற்றவுடன், அரசியலில் கடைசி மைல் கல் வந்துவிட்டதாகக் கருதியவர்கள் பலர் உண்டு!

தமிழகத்தைப் பொறுத்தவரையில், அவர் கண்ட கழகம் இல்லையேல், பெற்ற சுதந்தரத்தின் பயனையே பெற்றிருக்க முடியாது! பாராளுமன்ற சனநாயகத்தின் உண்மைப் பொருளையே உணர்ந்திருக்க முடியாது!

விடுதலை பெற்றவுடன், 'ஒரே கொடி—ஒரே கட்சி' என்று நடைபோட்ட நாடுகள் ஏராளம்! அல்லது, அதற்கு வழிவகுத்துக் கொண்ட அரசியல் அமைப்புக்களைக் கொண்ட நாடுகளும் தெரிகின்றன!

இந்திய மண்ணில் அந்த நிலைக்கு இடம் எழவில்லை; குறிப்பாகத் தமிழகத்தில், 'அந்த வாடை எழவே இல்லை' என்ற நிலைமை ஏற்படுத்தியவர் அவர்!

'ஒரு கையை வைத்துக் கொண்டு ஓசை உண்டாக்குகிறேன்' என்று கூறுவது பேதமை—மடமை!

கட்சிகள் சேர்ந்ததுதான் சனநாயகம்! அதை உருவாக்கிய பெருமையில், அவர் கண்ட கழகத்துக்குத்தான் முக்கிய பங்கு!

ஆளும் கட்சியாகவே பிறந்ததல்ல அவரது கழகம்! எதிர்க் கட்சியாக இருந்து நிர்வாக அமைப்பாக வளர்ந்த ஒன்று!

பரம்பரைப் பெருமைகளினால் பொது வாழ்வில் உலவிக்கொண்டிருப்பவர்கள் உண்டு! பக்க பலத்தினால் மட்டுமே உயிர் வாழ்ந்து கொண்டிருப்பவர்களும்இருக்கத்தான் செய்கிறார்கள்! அவ்வப்போது நடைபெறும் நிகழ்ச்சிகளினால் பெயரை ஒட்டவைத்துக் கொண்டிருப்பவர்களும் ஆங்காங்கே தெரிகிறார்கள்! 'இருக்கிறேன்' என்பதை அவர்களே சொல்ல வேண்டிய நிலையில் இருப்பவர்களும் இருக்கிறார்கள்!

ஆனால், அவர் மட்டும் அவராகவே இருக்கிறார்! அவராலேயே உயர்ந்தவர் அவர்! அவரைப் பற்றிக் கூற அவரையேதான் எடுத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது!

மொழிக்கு ஒரு அரசியல்—பொருளாதாரத்துக்கு ஒரு அரசியல்—சமுதாயத்துக்கு ஒரு அரசியல் — இப்படி, வகைக்கு ஒரு இயக்கமுள்ள அமைப்புகளைப் பார்க்கிறோம்!

அவருடைய கழகம், அத்துணையையும் உள்ளடக்கியிருக்கிறது!

தலைமுறைகளுக்காக இயக்கம் கண்டவர் அவர்!

பல தத்துவங்களுக்காக கழகம் அமைத்தவர் அவர்!

வந்து போகும் நிகழ்ச்சிகளுக்காக உருவானதல்ல—அவர் உருவாக்கிய கழகம்!

அவர் செல்லும் பாதை நேர்மையானது! சொல்லும் சொல் புனிதமானது! எனவே அவர், பிரகாசித்துக் கொண்டே இருக்கிறார்!

நேரமறிந்துதான் சொல்லுவார்! காலமறிந்துதான் செயல்படுவார்!

வேண்டியவைகளை—எவரும் ஏற்றுக்கொள்ளும் வகையில் கூறுகிறார்!

வேண்டாதவைகளை—அனைவரும் ஒப்புக்கொள்ளும் வகையில் தள்ளிவைக்கிறார்!

குழப்பத்துடன் அவரிடம் செல்பவர்கள், தெளிவுடன் திரும்புகின்றனர்!

கோபம் கொப்பளிக்க அவரைக் கண்டுவரப் போகிறவர்கள், சாந்தம் தவழ வெளியே வருகின்றனர்!

ஒரு சிலதான் சொல்லுகிறார்—அதுவே நீடித்த கொள்கை விளக்கமாகிறது!

ஓரிரு சொற்கள்தான் கூறுகிறார்—அதுவே தத்துவமாகிறது!

அரசியலில்—பொது வாழ்வில், 'கடமை—கண்ணியம்—கட்டுப்பாடு' என்ற தாரக மந்திரத்தை அறிமுகப்படுத்திய முதல் மனிதர்! அதனைக் கடைபிடித்த இயக்கத்தின் தனித் தலைவர்!

தங்கு தடையின்றி வந்ததல்ல—அவரது அரசியல் தேர்!

ஓட்டம் சீர்பட—செம்மையாக இருக்க—ஓரிரு சமயங்களில், அவரே தங்கு தடைகளை நிர்ணயித்துக்கொண்டதும் உண்டு!

அவரும் அவர் கண்ட கழகமும், இன்று தமிழகத்தில் இருந்திராவிட்டால்.........? கற்பனைக்காகவேனும் ஓர் சிறிது நேரம் எண்ணிப்

(4-ம் பக்கம் பார்க்க)

இன்னம் ஐம்பதாண்டுக் கடமை!

முத்து

"கல்லெல்லாம் பரலாகி மண்ணாகிப் போகும் வண்ணம் விசையோடு பொங்கிப் பாய்கின்ற புனல் வெள்ளம்! அதிற் சிக்கிக் கரையேற முடியாமல் தவிக்கின்றான் ஒருவன். அவனைக் கவனித்த பிறகும், 'காப்பாற்ற யாரும் வரவில்லையே' என்று விவாதித்துக்கொண்டிருக்கிறார்கள் ஒரு பத்துப் பேர்! அந்நேரம், எங்கோ இருந்து வந்து ஒருவன் நீரில் குதித்து மூழ்கியவனைக் காப்பாற்ற முனைகின்றான்—முடியவில்லை; அவனுந்தான் நீரினுள்ளே மூழ்கும் நேரம்! பரிதாபம் கண்டு பக்கத்தில் வந்த இன்னொருவன், மரத்திலே கட்டியிருந்த படகை அவிழ்த்து விடுகின்றான்; இருவரும் மெல்லப் பற்றிப் படகேறிக் கரை வந்து சேருகின்றனர்!

இது ஒரு நிலை விளக்கம். இதில் யாரை நீங்கள் வீரன் என்கிறீர்கள்? படகவிழ்த்து விட்டவனை நீங்கள் 'வீரன்' என்பீர்களானால், பேரறிஞர் அண்ணா அவர்களையும் 'வீரர்' என்றே ஒப்புக்கொண்டாக வேண்டும்.

நாடே தூங்குகையில், தாம் மட்டும் விழித்திருந்து மொழிக் காவல் செய்த வீரர் அவர்!

"சோதனைக் கட்டத்தில் மக்களின் நன்மைக்காகத் தன்னால் முடிந்த அனைத்தையும் முறையாகச் செய்கிறவன் யாரோ, அவனே வீரன்"

என்று—இதே செப்டம்பர் மாதத்தில்—பேர்லினில் இட்லரால் தூக்கிலிடப்பட்ட ஜூலியஸ் பூசிக் சொன்னான்.

எந்தத் தாகூரின் கவிதையைத் 'தேசிய கீதம்' என்று இசைத்துக்கொண்டிருக்கிறோமோ, அந்த இரவீந்திரநாதரே,

"அகண்ட உண்மைகள் அடங்கிய
உங்கள் தமிழ் மொழியைக் கற்றுக்
கொள்ளாமல் போய் விட்டேனே!"

என்று மனம் வருந்திச் சொல்கிற அளவு வளம் மிக்க தமிழுக்குத் தொல்லை நேர்ந்தபோதெல்லாம் துணையிருந்து காத்தவர் அண்ணா ஒருவர்தாம்!

அண்ணா ஒரு தனி வார்ப்பு! அவர், தனித் தாதுக்களால் ஆக்கப்பட்டவர்! ஆமாம்; தம்மால் மட்டுமே இந்த நாடு உருப்பட்டாக வேண்டும் என்பதைப் புரிந்துகொண்டு, அதற்காகத் தம்மை அர்ப்பணித்துக் கொண்டவர் அவர்!

'சீவக சிந்தாமணி' ஆசிரியர் திருத்தக்க தேவர் சொன்ன மாதிரி அண்ணா அவர்கள், 'பொன்னுயிராய்ப் பிறந்து உய்ந்த மூர்த்தி!'

எமன் வாயில் விழுந்து விழுந்து அவன் மென்று கொண்டிருக்கும் போதும், மக்களின் நன்மையே தம் மூச்சு என்று சொல்லிக்கொண்டிருக்கும் இலட்சியவாதிகளின் வர்க்கத்தைச் சேர்ந்தவர் அவர்!

தங்கள் உடைமைகளையும் சலுகைகளையும் காப்பாற்றிக் கொள்ளவும், முடிந்தால் பெருக்கிக்கொள்ளவும் திட்டமிட்டுத் தரகு செய்யும் துரோகிகள் வேண்டுமானால், 'அண்ணா தமிழ்க் காவலரா, அல்லவா?' என்ற வாதங்களில் ஈடுபட்டுக்கொண்டிருக்கட்டும்! பொதுமக்களைப் பொறுத்தவரையில், 'அவர், சமயத்தில் மொழி காத்த சான்றோர்' என்று நடுநிலை நின்று தீர்ப்பு வழங்கிவிட்டார்கள்!

"பல நூற்றாண்டுகளாய்ப் பயங்கரமான படையெடுப்புகள்—தாக்குதல்களை யெல்லாம் தாக்குப் பிடித்துக்கொண்டு தலைநிமிர்ந்து வாழ வழி செய்யும் ஒன்றே ஒன்று, தமிழ் மொழியின் உயிர்ப்பான ஆற்றல்தான்" என்பதை—என்று அண்ணா அவர்கள் கண்டு கொண்டாரோ — அன்றே, அதனைச் 'சிக்'கெனப் பிடித்துக் கொண்டார்!

தமிழ் மொழியின் தூய்மை காக்கப்பட்டால்தான், அதன் வழியே தமிழ்க் கலைகள்—தமிழ் மரபு—தமிழ் இனம் காக்கப்படும் என்பதை நல்லபடி புரிந்துகொண்டு, நாட்டுக்கும் விளக்கிய நாவுக்கரசர் அவர்!

இட்லரின் அட்டகாசங்களுக்குத் துணையிருந்த டாக்டர் கோயபெல்ஸ், 'செக்' நாட்டின் ஆரம்பப் பள்ளிகளில் கூட ஜெர்மன் மொழியைத் திணித்திட முயன்றதைப் போல், இங்கே ஆதிக்கத்தின் அறிகுறியாய் இந்தியைத் திணிக்க முற்பட்டபோதெல்லாம் முன்நின்று, எதிரியின் செயல்களை முடமாக்கிப் போட்டார் அண்ணா!

அரசியல் விழிப்புணர்ச்சிக்குத் தோதாக -- இசைவாகக் கலாச்சார மறுமலர்ச்சி உண்டாக வேண்டும். அந்தக் கலாச்சார மறுமலர்ச்சிக்கு ஊனாய் -- உயிராய் இயங்குவது மொழி உணர்வுதான். அதனால்தான், அகிலம் படித்த அண்ணா அவர்கள், இயல்பாகவே மேடைக்குத் தமிழினைத் தேர்ந்தெடுத்தார்!

'யார்தான் மேடையில் தமிழ் பேசவில்லை?' என்று—இன்றைக்குப் போய் ஒட்டிக்கொண்டு இச்சகம் பேசும் ஓட்டடைகள் பேசிக்கொண்டிருக்கட்டும்! 'தங்கள் பிரச்சார மாளிகையின் அலங்கார விதானங்கள்' என்று அவர்களை நம்பிக் கெடுகிறவர்கள் கெடட்டும்!

ஆனால், 'ஆங்கிலம் பேசுவதில்தான் ஆண்மையின் சிறப்பே இருக்கிறது; அதுவே சமூகத்தில் உயர்ந்த நினைப்பை உண்டாக்கும்' என்று பொல்லாத வாதங்களைப் புனைந்து கொண்டிருந்தவர்களிடையே அவர், தேமதுரத் தமிழில் பேசினார் — தெவிட்டாத தீந்தமிழில் எழுதினார்! புதுப்புது உத்திகளைக் கையாண்டு, தாம் விரும்பிய கலாச்சார மறுமலர்ச்சிக்குத் தக்க வகையில் நாடகத் துறையிலும் புரட்சி செய்தார்!

வள்ளுவச் சான்றோர் சொன்னதுபோல், 'தோன்றின் புகழொடு தோன்றினார்!'

தாம் புகுந்த துறையெல்லாம் தம் புகழ் மிக்க தனி முத்திரையைப் பதித்துக்கொண்டே

போனார்! அவர் செயல்களின் போக்கு, அன்று, கூட இருந்தவர்களுக்கேகூடப் புதிராக இருந்தாலும், வருங்கால வரலாற்றாசிரியர்கள் அதில் தொக்கிக் கிடக்கும் இலக்கியக் கனவார்வம் பற்றித் தொகை தொகையாய் எழுதத்தான் போகிறார்கள்!

எங்கும் அண்ணா! எதிலும் அண்ணா! இளையவர் நினைப்பில் அண்ணா! முதியவர் பேச்சில் அண்ணா! எளியவர் வழியில் அண்ணா! தமிழ் என்றால் அண்ணா! பேச்சென்றால் அண்ணா! எழுத்தென்றால் அண்ணா! கலை என்றால் அண்ணா!

மொத்தத்தில் தமிழ் மொழியும், கலையும், மரபும் செழித்திட அண்ணா நடத்திய அமைதிப் புரட்சி, தமிழ் மக்களிடையே ஈராயிரம் ஆண்டுகளுக்கு அப்புறம். மீண்டும் ஒரு முறை, பாரிய விழிப்புணர்ச்சியை உண்டாக்கி விட்டது!

'தேர்தலுக்காக அல்ல சழகம் -- அது ஆற்ற வேண்டிய பணி அதிகம்! இன்னம் ஐம்பதாண்டுக் கடமை நமக்கு உண்டு!

"தமிழ் இனம்—தமிழ் மொழி—தமிழ் மரபு—இவற்றைக் கெடுக்கிறது--அழிக்கிறது காங்கிரசு! எனவேதான், நான் அரசியலில் ஈடுபடுகிறேன்! தமிழ் மரபை அறிந்தவர்கள்—மாண்பைப் புரிந்தவர்கள் ஆட்சிக்கு வரட்டும்!"

---அறிஞர் அண்ணா

(விருகம்பாக்கம் மாநாட்டில்: 30—12—66)

ஆனால், 'அனைத்திந்தியத் தேசியம்' என்று இல்லாத ஒன்றை இந்தி வெறியர்களுக்கு இசைவாகப் புனைய முயலும் முரட்டுத் துரோகிகளுக்கு அவர் சிம்ம சொப்பனம்! அவர் பெயரே—அந்தப் பெயரின் வெளிப்பாடே ஒரு பெருஞ்சக்தியாய்ப் பல்கிப் பரிணமித்ததை அவர்கள் புரிந்துகொண்டார்கள்!

ஒரு 'மின்சார ஜெனரேட்டர்' போல், அவர் தொட்ட இடமெல்லாம் ஒளிமயமாயிற்று! அவர் புகுந்த வழியெல்லாம் புதுமை பூத்துக் குலுங்கிற்று!

அதனாலேதான், இலக்கியத்தின் மூலம் மறுமலர்ச்சி உண்டாக்கிய ஜெர்மன் எழுத்தாளன் **ஹெயின்ரிச் ஹெயின்** என்பார் பெயரை, ஜெர்மன் இலக்கியத்திலிருந்தே அகற்றிப் பேயாட்டம் போட்ட டாக்டர் **கோயபல்ஸ்** போலவே இங்கேயும், 'அண்ணா' என்ற முன்னெழுத்துச் சொல்லையே முற்றிலும் அகராதியிலிருந்து அகற்றி எறிந்திட, 'வக்கீல் பக்தவத்சலங்கள்' திட்டமிட்டனர்! 'கள்ளம்' என்ற சொல்லுக்கே பொருள் புரியாத பிஞ்சு நெஞ்சங்கள், தம கண் திறந்து கருத்தளிக்கும் ஆசானை 'அண்ணா' என்று—உடன்பிறந்த பாசத்தோடு அழைத்த மரபுக்குத் தடை போட்டார்களே!

தம்மை எதிர்த்து முழக்கமிட்டு வீரக் கனல் பரப்பிய பாண்டியக் கட்டபொம்மனின் பாஞ்சாலக் குறிச்சிக் கோட்டையைத் தாக்கித் தகர்த்துத் தரைமட்டமாக்கியதோடு மட்டுமன்றி, கழுதைகளைக் கொண்டு அந்தக் கோட்டை மேட்டை உழுது — புழுதி அடித்து—இரவோடு இரவாய் ஆமணக்குப் பயிரிட்ட ஏகாதிபத்திய வெள்ளை வெறியர்களின் கொடுமையைப் பதிவு செய்துகொண்ட திருநெல்வேலி 'கெசட்டிர்', அந்தத் துரோகத்துக்குத் துணையாய்க் கழுதைகளை அனுப்பிக் காவலும் காத்த எட்டையபுரத்துக் குறுநில மன்னனின் துரோகத்தைக் குறித்துக் கொள்ளவும் தவறவில்லை!

எந்த விடுதலை உணர்வை—வீர மரணத்தைக் குழி தோண்டி மண்ணுக்குள் புதைத்ததாய் வெறுங்கனவு கண்டு கொண்டிருந்தார்களோ அதுவே நூறாண்டு கழித்து—எட்டையபுரத்துப் பாரதியாய், ஒட்டப்பிடாரம் சிதம்பரமாய், சுப்பிரமணிய சிவாவாய் அந்த மண்ணிலேயே முளைத்துச் செழித்து, அதே ஏகாதிபத்தியத்தின் வேர் மண்ணைச் சுவை பார்த்தது!

அதுபோலவேதான், 'அண்ணா' அவர்கள் உழைப்பின் பலனைப் பெயர்த்து எறிந்திடக் 'கையிலாகாதவர்கள்' முயன்றபோதெல்லாம்—ஆங்கிலத் துரைத்தனத்தின் அதிகாரப் பிடியிலிருந்து ஒவ்வொரு முறையும் உருவித் தப்பிய பெருங் கவிஞன் பாரதியைப் போல்—அவர், புதுப் புது முனைகளில் முகிழ்த்துக்கொண்டிருந்தார்! காரணம், 'கலாச்சாரம் இல்லாமல் சமதர்மச் சமுதாயத்துக்கு அடிகோல முடியாது' என்ற — அண்ணா அவர்கள் புரிந்துகொண்ட—எளிய உண்மையை, 'இடந்தேடிகள்' புரிந்துகொள்ளாததுதான்!

'பிறவிக் கலைஞன் ஒரு பிறவி வீரன் என்பது ஏனோ பலருக்குத் தெரிவதில்லை'

என்று ஒருமுறை வேதனையோடு குறிப்பிட்டார்—வங்கக் கவி அரீந்திரநாத் சட்டோபாத்யாயா!

'பிறவிக் கலைஞன்' என்று அவர் குறிப்பிடுவது, வான ரதமேறி விண்ணுலகின் கற்பனை மாளிகையில் நின்றுகொண்டு எழுதிக்கொண்டிருக்கும் மேதாவிகளை அல்ல! அவர்களைக் 'கலைஞர்கள்' என்று காலமும் ஒப்புக்கொண்டதில்லை! காலத்தை வென்று அவர்கள் நின்றதும் இல்லை!

மாக்சிம் கார்க்கியைப் போல் சமுதாயத்தின் நட்ட நடுவில் நின்றுகொண்டு, சர்வ சாதாரண மனிதனுடன் இருந்து - உறங்கி - இலை போட்டுச் சாப்பிட்டு, அவனுடைய இன்ப துன்பங்களில் பங்கு கொண்டு - கசப்பான பட்டறிவும், விழுப்புண்களும் பெறுகிறவனே கலைஞன்!

அதனால்தான், மாஸ்கோவின் செஞ்சதுக்கத்தில்—சோவியத் நாட்டின் புதிய சமுதாயத்தினைப் படைத்த மாவீரன் சமாதிக்கருகில்—கிரெம்ளின் மாளிகைச் சுவர்ப் பக்கத்தில் — நாட்டுக்காக உயிர்நீத்த வீரர்களின் வரிசையில் மாக்சிம் கார்க்கியின் 'அஸ்திக் கலசமும்' உரிய மரியாதையுடன் வைக்கப்பட்டிருக்கிறது! மொழி உணர்வுக்கும், கலை வளர்ச்சிக்கும் தம் வாழ்வை அர்ப்பணித்த கலைஞருக்குத் தரப்படும் தலையாய சிறப்பு அதுதான்! மொழியும் கலையும் வாழ்க்கைக்கு வழிகாட்டும் பான்மை அதுதான்!

1938-ல், வெள்ளையர் இருந்தபோதே — வெள்ளை ஆதிக்கத்தை வேரறுக்க வழிசெய்து கொண்டே புதிய ஒரு மொழி ஆதிக்கத்துக்காகத் திட்டமிட்டுப் பாதை அமைத்துக் கொண்ட எத்தர்களை இனம் புரிந்து கொண்டதாலேதான், அண்ணா அவர்கள், துணிந்து, தளபதியாய் நின்று இந்தியை எதிர்த்தார்!

அதோடா விட்டார்கள் இந்தி வெறியர்கள்? மக்கள், விடுதலை பெற்ற மகிழ்ச்சியில் திளைத்துக்கிடந்த நாளில்—விடுதலைக்குப் போரிட்டு விசை ஓய்ந்து முயற்சிகள் திசை திரும்ப வேண்டிய நேரத்தில் – மீண்டும் மெல்ல இந்தியைத் திணிக்க முனைந்தனர் விஷமிகள்!

ஊரெல்லாம் தூங்குகையில் விழித்திருந்து காவல் செய்யும் மொழிக் காவலர் அண்ணா, அப்போதும் விடவில்லை! தமிழைக் கொட்டவந்த இந்திக் கொடுக்கின் முனை மழுங்கப் பதில் செய்து அனுப்பினார்!

ஏமாறி ஏமாறித் திரும்பிய இந்தி வெறியர்கள், திட்டமிட்டு அரசியல் சட்டத்தில் இந்திக்கு ஏற்றம் தந்தனர்!

செய்திகளைப் படித்தவர்கள், அதையும், 'செய்தி' என்றுதான் படித்தார்கள்! ஆனால் அண்ணாவோ, 'திக்கெட்டும் புகழ் மணம் பரப்பும் தீந்தமிழர் சமுதாயத்தைச் சிதை வைக்கும் சதி அது' என்று அம்பலப் படுத்தினார்!

அப்போது முதல், திட்டமிட்ட இந்தித் திணிப்பைத் தகர்த்திடுவதைத் தம் திட்டங்களுள் ஒன்றாக்கிக் கொண்டார் அண்ணா!

தம் படிப்பு—சிந்தனை—பட்டறிவு—இவற்றில் உருவான எண்ணங்களைப் பிழிந்தெடுத்து வடித்துத் தம் இதயத்தில் வைத்துத் தேக்கி, வாரந்தோறும், இதழ்களில் கொஞ்சங் கொஞ்சமாய்க் கொட்டிச் சுவை சேர்த்தார்! கம்பிகள் வழியே மெல்லப் பாயும் மின்சாரம்போல், அவை, இதழ் இதழாய்ச் சென்று தமிழர் இதயங்களில் தங்கி—நாடி நரம்புகளில் சூடேற்றி—புத்துணர்வை - புது வாழ்வைச் சமைத்தன!

அதன் பிறகுதான், இந்தித் திணிப்புக்குத் துணையிருந்த சிலரே மனம் மாறி—மக்கள் போக்கைப் புரிந்துகொண்டு—அண்ணாவுக்கு ஆதரவு காட்டினார்கள்! அண்ணாவின் மொழிக் காவல், மொழிப் பிரச்சினையில் தமிழகத்தை ஒன்றாக்கிவிட்டதென்று புரிந்து கொண்டனர் — வடநாட்டுப் பேயர்கள்!

அந்த நேரம் பார்த்துத்தான் சீனன் பகை கக்க, 'ஆகா; வாய்த்ததொரு நல்வாய்ப்பு; இதை விட்டோமோ—இந்தி தொலைந்ததோ' என்று பரிதவித்துப் புலம்பி, மீண்டும் ஒரு தாக்குதல் நடத்தினர்!

(4-ம் பக்கம் பார்க்க)

நடக்க இருப்பவை:

அறிஞர் அண்ணா
பிறந்த நாள் விழாப் பொதுக்கூட்டங்கள்

15--9--67

அருப்புக்கோட்டை

தி. மு. க. சார்பில் இரவு 7-மணிக்கு பொதுத் திடலில்; தலைவர்: அ. துரைசாமி; பேசுவோர்: பி.பி.என். நல்லதம்பி, இரா. சின்னச்சாமி, மு. சுந்தரராசன், ஆ. வெள்ளைச்சாமி.

பார்த்திபனூர்

தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு அண்ணா திடலில்; தலைவர்; இரா. ரெங்கன்; பேசுவோர்; வெ. கண்ணன், தா. கிருட்டினன் எம்.ஏ., எம்.பி, டி. கே. சிறைமீட்டான் எம்.எல்.ஏ., முத்துராமலிங்கம் பி.எஸ்சி, சுப. தங்கவேலன், இரா. அழகு, இரா. குருசாமி, அ. அபுபக்கர்.

குடந்தை 20-வது வட்டம்

தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு நாகேசுவரன் சன்னதியில்; தலைவர்: ப. நாராயணசாமி; பேசுவோர்: அமைச்சர் சத்தியவாணிமுத்து, கோ. சி. மணி, சு. பத்மநாபன், பி. வி. செயராமன் எம்.ஏ.

செயங்கொண்டம்

கலைஞர் கருணாநிதி மன்றச் சார்பில் மாலை 6-மணிக்கு அண்ணா சதுக்கத்தில்; தலைவர்: கே. என். அமிர்தலிங்கம்; பேசுவோர்: கோ. சிவப்பெருமாள், பா. நாராாணசாமி, ஏ. கே. மூர்த்தி எம்.எல்.ஏ., கே. என். இராமச்சந்திரன் எம். எல். ஏ. (கே. பி. யோகராசன்—எம். எஸ். மல்லிகா குழுவினரின் கலை நிகழ்ச்சி நடைபெறும்)

விழா நிகழ்ச்சிகள்
சென்னையில்:

முதல் வட்டம்

நாவலர் குடிசை வாழ்வோர் மன்றச் சார்பில் மாலை4 –மணிக்கு தி. ப. பத்மநாபன் தலைமையில் து. வேணுகோபால் எம்.சி. கொடியேற்றுவார்; எம். ஆர். கண்ணன் எம்.எல்.ஏ., து. கோவிந்தசாமி, கே. சுப்பிரமணி, ஜி. முனியப்பன் ஆகியோர் பேசுவர்.

4-வது வட்டத்தில்

காலை 9-மணிக்கு கிளைக் கழகப் பணிமனையில் மு. மாரிமுத்து தலைமையில் எம். ஆர். கண்ணன் எம்.எல்.ஏ. கொடியேற்றுவார்; மோகனரங்கம் எம்.சி., ஆர். ஆறுமுகம் எம்.சி., டி. வேணுகோபால் எம்.சி., ஆகியோர் பேசுவர்; மு. இராமசாமி பொங்கல் வழங்குவார்.

எம். ஜி. ஆர். மன்றச் சார்பில் 10–மணிக்கு து. கோவிந்தசாமி தலைமையில், எம். ஆர். கண்ணன் எம்.எல்.ஏ., எம்.எஸ். இராசாமணி ஆகியோர் பொங்கல் வழங்குவர்.

காலை 11-மணிக்கு மக்கள் முன்னேற்ற மன்றச் சார்பில் ஆர். செல்வரங்கம் தலைமையில் எம். ஆர். கண்ணன் எம்.எல்.ஏ., து. கோவிந்தசாமி, ஆர். ஆறுமுகம் எம்.சி. து. வேணுகோபால் எம்.சி; மோகனரங்கம் எம்.சி., ஆர். ஏ. முத்து, குசால்தாஸ் ஆகியோர் பேசுவர்.

அண்ணா அன்பு மன்றச் சார்பில் காலை 11-மணிக்கு எல். கே. கதிர் தலைமையில் து. கோவிந்தசாமி கொடியேற்றுவார்; தமிழழகன் பொங்கல் வழங்குவார்.

10-வது வட்டம்

காலை 10-மணிக்கு நாராயணப்ப நாயக்கன் தெரு 9-வது சந்தில், தோட்டத்தில்; தலைவர்: ந. இராமதாஸ்; பேசுவோர், க. அறிவழகன் எம்.எல்.சி., கா. வேழவேந்தன் எம்.எல்.ஏ., அ. செல்வராசன் எம்.சி.

மக்கள் நற்பணி மன்றத்தில் காலையில், ஆர். ஆறுமுகம் எம் சி. தலைமையில் எம். ஆர். கண்ணன் எம்.எல்.ஏ. கொடியேற்றுவார்; சர்க்கரை பொங்கல்வழங்கப்படும்.

தாமரையான் தலைமையில், எம். வேதாசலம் எம்.எல்.ஏ., கொடியேற்றுவார்; டி. வெங்கடேசன் எம்.சி. அண்ணா படத்தைத் திறந்துவைப்பார் இன்பதாசன் இனிப்பு வழங்குவார்; குசால்தாஸ், பூ. பி. சாரதி, டி. எஸ். வேலன் ஆகியோர் பேசுவர்.

13-வது வட்டத்தில்

தி.மு.க. கிளை சார்பில் காலை 9-மணிக்கு சாலைவிநாயகர் கோயில் தெரு — மாநகராட்சி உயர்நிலைப் பள்ளியில் முன்னாள் மேயர் வி.முனுசாமி தலைமையில் அறிஞர் அண்ணா படத்தை கே. குப்புசாமி பி ஏ.பி.எல்., எம்.சி. திறந்துவைப்பார்.

எம். ஜி. ஆர். மன்றச் சார்பில் காலை 10-மணிக்கு சுப்பாராவ்

21-வது வட்டம்

தி. மு.. க. சார்பில் காலை 9 மணிக்கு 1000 பேருக்கு உணவளிக்கப்படும்; நாதஸ்வர இசை நிகழ்ச்சி நடைபெறும். எ. சாமிநாதன் தலைமையில் து. வேணுகோபால் எம்.சி, கழகக் கொடியேற்றுவார்; அண்ணா படத் திறப்பு, எம். ஆர். கண்ணன் எம்.எல்.ஏ., உணவு வழங்குபவர் கே. எம். தீனதாயளன், எஸ். இராகவானந்தம் எம்.சி., எஸ். ஏ. செல்லையா, சு. மோகனராசு ஆகியோர் பேசுவர்.

23-வது வட்டத்தில்

தி. மு. க. ஆதரவாளர்கள் சார்பில் காலை 10-மணிக்கு, கொருக்குப்பேட்டை சி. பி. ரோடில் உள்ள பணிமனையில் இரா.அரங்கநாதன் தலைமையில் அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன் எம்.எல்.சி. கொடியேற்றிவைப்பார்; ஆர். ஆறுமுகம் எம்.சி, இனிப்பு வழங்குவார்; எம். ஆர். கண்ணன் எம்.எல்.ஏ. உணவளிப்பார்; டி. கே. பொன்னுவேலு பி.ஏ., எம். எஸ். இளங்கோ, டி. வெங்கடேசன் எம்.சி., எஸ். என். திராவிடமணி, சி வி. ஆடலழகன், கே. எஸ். தினகரன், ஆர். குலசேகரன் ஆகியோர் சிறப்புரையாற்றுவர்.

இன்னம் ஐம்பதாண்டுக் கடமை

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

'வெள்ளையனை வெளியேற்றுவோம்' என்று வீரம் பேசிக் கொண்டே, மொழித் திணிப்பு விஷமத்தில் ஈடுபட்ட அதே காங்கிரசுப் பாணியில், 'சீனரைச் சிதறடிப்போம்--சிறைவைப்போம்' என்று ஓர் அணி பேசிக்கொண்டே இருக்க—அவர் கவனமும் ஆங்கே இருக்க—இன்னொரு அணியினர், 'பிற தேசிய மொழிகளை அழித்து இந்தியை முழுத் தேசிய மொழி ஆக்கிடும்' அற்பத்தனத்தில் இறங்கினர்!

அவர்கள் அற்பத்தனம் அதிகம் ஆக ஆக, அண்ணா அவர்களின் வாதப்போக்கு வலிமை பெற்றது! கன்னித் தமிழிடத்து அவர் கொண்ட தணியாத காதல், மொழிக் காவல் புரிய வைத்தது! இல்லையேல், ஐநூற்றுச் சொச்சம் பேர் அமர்ந்திருந்த நாடாளுமன்றத்து மாநிலங்கள் அவையில் தன்னந்தனியராய் நின்று வீறுடன் பேசியிருக்க முடியுமா?

முந்தி இருந்த முதல்வர்கள் எல்லாம், 'குந்தி இருக்கும் இடம் பறிபோய்விடக் கூடாதே' என்று—தமிழினத்தின் சிறப்பினைச் சொல்லக் கூட வாய்கூசிக் கிடந்ததைக் கண்ட நமக்கு, தமிழ் மரபறிந்து ஆட்சிசெய்யும் முதல்வர் கிடைத்த பேற்றை எண்ணிக் கிடக்கிறோம்!

அண்ணா முதல்வரானது, இந்தத் தலைமுறையின் பேறு மட்டுமல்ல — தமிழ் மொழி உள்ளளவும் நினைத்துக் களித்திட வேண்டிய ஒன்றாகும்!

பொறுப்பேற்கு முன்பே—இன்னம் சொன்னால், தேர்தலில் ஈடுபடு முன்னே—விருகம்பாக்கம் மாநாட்டில் பேரறிஞர் அண்ணா,

> **"தேர்தலுக்காக அல்ல கழகம்; அது ஆற்ற வேண்டிய பணி அதிகம்; இன்னம் ஐம்பதாண்டுக் கடமை நமக்கு உண்டு"**

என்று பேசியபோது, அதன் ஆழ்ந்த பொருளைப் புரிந்துகொள்ளாதவர்கள், தமிழக அரசு மேற்கொள்ளும் போக்கினைக் கண்ட பிறகாவது—அனைத்திந்திய அரசியல் வானில் இந்தி போடும் பேயாட்டத்துக்கு ஈடுகொடுத்துக் கொண்டே தமிழையும் காத்திட வேண்டிய நிலை உள்ளதைக் கண்ட பிறகாவது புரிந்துகொள்ளட்டும்!

ஏனென்றால், களத்தில் இறங்கிவிட்ட பின்னாலே எதிரணியை உடைப்பது மட்டுமல்ல—நம் தமிழின் வளர்ச்சிக்கான ஆக்க முயற்சிகளிலும் ஈடுபட்டாக வேண்டும்!

அதைத்தான் 'இன்னம் ஐம்பதாண்டுப் பணி' என்று அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள்.

அந்தப் பணி தொடரட்டும்! அதுவரை அண்ணா அவர்கள் நம் தலைவராய் இருந்து வழிகாட்டட்டும்!

அவர்!

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

பார்த்தால், அதன் அருமை பெருமை புரியும்!

அவரும் கழகமும் இருப்பது, காலத்தின் தேவை—நியாயத்தின் தீர்ப்பு!

அதன் ஒரு முக்கிய வளர்ச்சிக் கட்டமே தி மு.க. அரசு அமைந்திருப்பது!

காலத்தே பெய்த மழை அவர்!

நல்லவர்களுக்கென்று மட்டும் தனியாக வானம் பொழிவதில்லை!

நிலமடந்தை எல்லா மாந்தர்களையும்தான் தாங்குகிறாள்!

தமிழகம் இப்போது அவரைச் சொந்தமாக்கிக்கொண்டது!

தமிழர் சமுதாயத்துக்கு ஒரு நிறைவாக இருக்கும் அவருக்கு, நாளை 59-ம் வயது பிறக்கிறது!

நாமெல்லாம் நலமுடன் வாழ, அவர், சிறந்து வாழட்டும் பல்லாண்டு!

—எஸ். ஆர்.

27-வது வட்டம்

தி.மு.க. சார்பில் இரவு 7 மணிக்கு பெருமாள் கோயில் தோட்டம் 4-வது சந்தில் எஸ். எம். முருகேசன் தலைமையிலும்—எம். ஆர். கண்ணன் எம்.எல்.ஏ. முன்னிலையிலும் குற்றாலம் அரங்கநாதன்—சந்தானலட்சுமி குழுவினரின் கலை நிகழ்ச்சி நடைபெறும்.

30-வது வட்டம்

கிளைக் கழகச் சார்பில் காலை 9-மணிக்கு நீடின்பன் தலைமையில் கி.மனோகரன் எம்.ஏ.,எம்.பி.கொடியேற்றிவைத்து குழந்தைகளுக்கு இனிப்பு வழங்குவார்.

38-வது வட்டம்

எம். ஜி. ஆர். மன்றப் பணிமனையில் காலை 8-மணிக்கு செயலாளர் வி. கங்காதரன் தலைமையில் மு.க. முத்து கொடியேற்றுவார்; நடிகர் கண்ணன் அண்ணா படத்தைத் திறந்துவைப்பார்; தி. சு. நல்லதம்பி எம்.சி. உணவு வழங்குவார்; மா. அருள், மணிமொழி ஆகியோர் சிறப்புரையாற்றுவர்; எம். ஆர். வெங்கடேசன் இசை வழங்குவார்.

64-வது வட்டம்

டாக்டர் சத்தியவாணிமுத்து நற்பணி மன்றச் சார்பில் காலை 11-மணிக்கு பூங்கா நகர் நாராயணப்பா சாலையில் (வெளியூர் பேருந்து நிலையம் அருகில்) கூ. ம. மாசிலாமணி தலைமையில்—போ. கு. இராமதாசு முன்னிலையில் அமைப்புச்செயலாளர் என். வி. நடராசன் எம்..எல்.சி. கொடி ஏற்றிவைப்பார்; க. அறிவழகன் எம்.எல்.சி., மன்றத்தைத் திறந்துவைப்பார்; எச். வி. ஹண்டே எம்.எல்.ஏ. உணவளிக்கும் நிகழ்ச்சியைத் துவங்கிவைப்பார்.

67-வது வட்டம்

அறிஞர் அண்ணா மன்றச் சார்பில் காலை 8-மணிக்கு எழும்பூர்—வீராசாமி பிள்ளைத் தெருவில் நடிகர் ஆனந்தன் கழகக்கொடி ஏற்றிவைப்பார்; காலை 10-மணிக்கு கே. பாஸ்கரன் எம்.சி. தலைமையில் நடிகை உதயசந்திரிகா உணவு வழங்குவார்; இரவு 7-மணிக்கு சுந்தரம் குழுவினரின் கலை நிகழ்ச்சி நடைபெறும்.

69-வது வட்டம்

தி. மு. க. சார்பில் காலை 8-மணிக்கு கோமளீசுவரன்பேட்டை நாகப்ப முதலி தெருவில் ஜம்புலிங்கம் கொடியேற்றுவார்; இனிப்பு வழங்கப்படும்.

மற்றும் பல வட்டங்களில்

வாழ்க அண்ணா!

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ரிட்டழைக்கப்படும் சிறப்புச் சரித்திரத்தில் ஒரு சிலருக்கே அமைகிறது!

குழந்தை மனத்தை இழக்காமல், குவலயத்தின் பிரச்சினைகளுக்குப் பரிகாரம் காண்பவர்களே குறிப்பாகச் செல்லப் பெயர் சூட்டப்படுகிறார்கள்! 'மகாத்மா', 'பெரியார்', 'சுவாமி', 'அபே', 'டெட்டி', 'பாபா' போன்றவை, வெறும் மனிதர்களைக் குறிப்பிடுவன அல்ல. புதுமைச் சகாப்தம் புலர்ந்தபொழுதில் பொன்மயமாய் ஒளிக்கதிர் பரப்பும் உதயசூரியனின் மாற்றுப் பெயர்கள் இவை; இந்த வரிசையில் இன்று வைத்தெண்ணப்படுபவர் நமது அண்ணா!

'அண்ணா' என்பது அவரது முழுப் பெயரான 'அண்ணாதுரை' என்பதன் சுருக்கமே-—என்று, வெளி மாநிலந்தவர் நினைக்கிறார்கள். பேளுக்குறிச்சி சோமசுந்தரம், சென்னை மணிமொழியார், மூதறிஞர் இராஜாஜி, பெரியார் இராமசாமி ஆகிய வயதில் மூத்தோரும், 'அண்ணா' என்றழைக்கிறார்கள்! ஆரம்பப் பள்ளியில் பயிலும் இளஞ் சிறார்களும் அப்படியே சொல்கிறார்கள்!

அவருடைய முழுப் பெயரின் சுருக்கமாக 'அண்ணா' என்பதைக் கொள்வதானால், இன்றைய இளைஞர்கள், 'அப்படி உச்சரிப்பதே மரியாதைக் குறைவு' என்று நினைப்பார்கள்.

ஆகவே, 'அண்ணா' என்பது சமுதாயம் சூட்டிய அன்புப் பெயர்-—செல்லப் பெயர் என்பதை மறைப்பதற்கு ஆசைப்படுவோர் தவறான வியாக்கியானங்களுக்கு அந்தப் பெயரை உட்படுத்தக்கூடாது.

'அண்ணா' எனும் பெயர், இந்த நாட்டின் கடந்த கால வரலாற்றோடு இழைந்தும், வருங்கால வாழ்வோடு பிணைந்தும் கலந்துவிட்டிருக்கிறது! 'பரம பிதா', 'அல்லா' என்பவை ஆண்டவனைக் குறிப்பதாக ஒதுக்கிக்கொண்டு, 'அல்லாவின் திருத் தூதுவர்', 'பரமபிதாவின் பிரதிநிதி' என்று ஏசுவையும், நபிகள் நாயகத்தையும் மார்க்க நூல்கள் வர்ணிப்பதைப்போல், 'அம்மையே', 'அப்பனே' என்று ஆண்டவனை அழைத்துக்கொண்டு, தங்கள் மொழி—சமுதாய—அரசியல் தலைவருக்கு, 'அண்ணா' எனும் பெயரைத் தமிழர்கள் குறிக்கிறார்கள்! இவர் மூலமாகவே இனித் தமிழர்கள் தங்கள் வாழ்வின் ஒளியைக் காண முடியும் என்பது உறுதியாகிவிட்டது!

அண்ணா அவர்கள் தனி மனிதரல்லர்-—அவர் ஒரு சகாப்தம்! பதினெட்டாம் நூற்றுண்டை, 'வால்டேர்–ரூசோ நூற்றுண்டு' எனக் குறிப்பிடுவதில்தான் வரலாற்று ஆசிரியர்கள் சுவை காண்கிறார்கள்.

வெறும் எண் போட்டு நூற்றுண்டைக் குறிப்பிடுவதைக் காட்டிலும், அந்த நூற்றுண்டின் சாதனைகளைப் பெருமளவு பிணைத்துக்கொண்டுள்ள தலைவர்களின் பெயரைக் குறிப்பிடுவது வரலாற்று மரபு. இந்த மரபுப்படி, இருபதாம் நூற்றுண்டின் இரண்டாம் பகுதியை, 'அண்ணா சகாப்தம்' என்றே குறிப்பிடும் வழக்கத்தை இனிவரும் தமிழக வரலாறு மேற்கொள்ளும் என்பது உறுதி.

"பிரான்ஸ் நாட்டின் வரைபடத்தைப் பார்க்க வேண்டிய சந்தர்ப்பங்களில், அதன் அதிபர் டிகால் தம்மையே கண்ணாடிமுன் நின்று பார்த்துக் கொள்வார்" என்று பிரான்சில் இன்று பேசப்படுகிறதாம்.

அறிஞர் அண்ணா அவர்கள் இதுபோல், கண்ணாடிமுன் நின்று தம்மைப் பார்த்துத்தான் தமிழகத்தை நினைவு கூறிக்கொள்ள வேண்டும் என்பதில்லை! அவர், வரைபடத்தையல்ல—அதில் வாழும் வாழ்க்கையைக் காண முயல்பவர்—களிக்க உழைப்பவர்!

அண்ணா அவர்கள் பிறந்த நாள் நமக்கு நன்னாள்! அவர் வாழும் நாளெலாம் நமக்கு பொன்னாள்! அவர் கால்பட்ட இடமெலாம் நமது கோயில்! அவர் எழுத்தெலாம் நமது கருவூலம்! அவர் பேச்செலாம் நமது வாழ்க்கை நெறிகள்! வாழ்க அண்ணா!

—தோழன்

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13, அச்சிட்டு வெளியிடப்படுகிறது.